

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் மகன் விஜயபிரபாகரன் மற்றும் துணை செயலாளர்கள் எல்.கே.சுதீஷ் மற்றும் பி.பார்த்தசாரதி ஆகியோர் சந்தித்து, 28.12.2024 அன்று நடைபெறவுள்ள தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள்.

### சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 84 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச. 25 -**

**சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் பணி நியமன ஆணைகள் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

சர்வதேச போட்டிகளான ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமன்வெல்த், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், தெற்கு ஆசிய விளையாட்டு கூட்டமைப்பு போட்டிகள், பாராலிம்பிக், ஆசிய பாரா போட்டிகள், (மாற்றுத்திறனாளி வீரர்கள் உட்பட) தேசிய அளவிலான போட்டிகள், ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமென்வெல்த் போட்டிகளின் பட்டியலில் உள்ள விளையாட்டுகளில் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும் தேசிய சீனியர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் மாநில சீனியர் சாம்பியன்ஷிப் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் 2024-25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், துணை முதலமைச்சர் அவர்கள் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், நடப்பாண்டில் 100 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்களில் அவர்களது சாதனைகள் மற்றும் கல்வித்தகுதியின் அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, முதற்கட்டமாக, சர்வதேச மற்றும்தேசிய அளவிலானவிளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பள்ளிக்கல்வித் துறை, தொழில் துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற 14 அரசுத் துறைகளில் இளநிலை உதவியாளர், உதவியாளர், இளநிலை வரைவு அலுவலர், கூட்டுறவு சங்கங்களில் இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளர் போன்ற பல்வேறு பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கல்வி உரிமைச் சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களால்

# தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தேர்ச்சி முறையில் எந்த மாற்றமும் கிடையாது!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விளக்கம்!



*சென்னை, டிச. 25 -*

“கல்வி உரிமைச் சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களால் தமிழ்நாட்டுப் பள்ளிகளின் தேர்ச்சி முறையில் எந்த மாற்றமும் கிடையாது; தற்போதைய தேர்ச்சி முறையே தொடரும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம் அளித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளும் தொடர்ந்து தடையின்றி கல்வி பயின்றிட ஏதுவாக, எட்டாம் வகுப்பு வரை கட்டாயத் தேர்ச்சி வழங்கப்படும் முறை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், கல்வி உரிமைச் சட்டத்தின் விதிகளைத் திருத்தம் செய்து, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு இரண்டு மாதங்களில் மறுதேர்வு முறையையும், அதிலும் தேர்ச்சி பெறாத குழந்தைகள் அதே வகுப்பில் ஓராண்டு பயில வேண்டும் என்ற முறையையும் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையைப் பின்பற்றி நடத்தப்படும் ஒன்றிய அரசுப் பள்ளிகளுக்கு, இந்தப் புதிய நடைமுறை பொருந்தும் எனவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், தடையின்றி எட்டாம் வகுப்பு வரை கல்வி பெறுவதில், ஒரு பெரிய தடைக்கல்லை ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தேசியக் கல்விக் கொள்கையைப் பின்பற்றாமல், நமது மாநிலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, சிறந்த கல்வியாளர்களை ஒருங்கிணைத்து, ஒரு புதிய மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்குவதற்காக, நமது அரசு தொடங்கிய பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. தமிழ்நாட்டில், மாநிலக் கல்விக் கொள்கை தொடர்ந்து பின்பற்ற ப்படும் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஒன்றிய அரசுப் பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளுக்குப் பொருந்தாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனவே, தமிழ்நாட்டில் உள்ள பெற்றோர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், கல்வியாளர்களும் ஒன்றிய அரசின் கல்வி உரிமைச் சட்ட விதிகள் குறித்து எந்தவகையிலும் குழப்பமடையத் தேவையில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தற்போதுள்ள தேர்ச்சி நடைமுறையே தொடரும் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைகளுக்கும் பாதுகாப்பாக அமையும். கல்வி தான் ஒரு சமூகத்தின் எதிர்காலத்தின் அடித்தளம். எனவே, மாணவர்கள் மகிழ்ச்சியோடும், பாதுகாப்போடும் கல்வி கற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவது தான் திராவிட மாடல் அரசின் இலக்கு. இந்த இலக்கை எய்தி, இந்தியத் துணைக் கண்டத்திற்கே, தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து விளங்கும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து தொய்வின்றி, நமது அரசு முன்னெடுத்துச் செல்லும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு இளையோர் சதுரங்கப் போட்டி வாழப்பாடியில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் த.ரமேஷ் வரவேற்றார். போட்டியினை மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி துவங்கி வைத்தார். எஸ்.ஆர்.பார்த்திபன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டியில் போட்டிக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு தொகை மற்றும் சான்றிதழ் வழங்கினார். இதில் முத்துலிங்கம், சோமசுந்தரம், ராஜா, வெண்ணிலா சேகர், உமாசங்கர், டாக்டர் செழியன், மருதமுத்து, மூர்த்தி, பாலசுப்பிரமணியம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வரத.ராஜசேகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர். அ. சீனிவாசன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செல்வமணி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் தனசேகரன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்டத் துணை அமைப்பார்கள் ரமேஷ் பாபு, தங்க பாண்டியன், லட்சுமண பெருமாள், விஜயகுமார், கிருஷ்ணவேணி, செல்வமணி, செல்வகுமார், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து தொண்டனர்.



திருச்சியில் தந்தை பெரியாரின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தி.மு.க. கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்துச்செல்வம், விஜயா ஜெயராஜ், கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, தொ.மு.ச. மாநில செயலாளர் குணசேகர், குடமுருட்டி சேகர், லால்குடி நகர செயலாளர் துரை, கதிர்வேல் மோகன்தாஸ் இளங்கோ நாகராஜ் ராம்குமார் கனகராஜ் கலைச்செல்வி, பீ.ஆர்.பாலசுப்பிரமணியன், ராமதாஸ், புஷ்பராஜ், பந்தல் ராமு, கருணாமூர்த்தி தஸ்தா, சர்ச்சில், மாணிக்கம், மதனா கருமண்டபம் சுரேஷ் பரமசிவம், கருத்து கதிரேசன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




சேலம் மண்டல தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஓமலூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் அமைச்சர்கள். எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினார்கள். மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம். டி.எம்.செல்வகணபதி எம்.பி.மாநில தகவல் தொழில் நூட்ப அணி துணை செயலாளர். டாக்டர்.ஆ.க. தருண். எம்.பிக்கள்.மணி. மலையரசன்.மாவட்ட செயலாளர்கள். தடங்கம். சுப்பிரமணி, பழனியப்பன்.உதயசூரியன். மதுரா.செந்தில். வசந்தம். கார்த்திகேயன்.அணியின் நிர்வாகிகள். கோவி. லெனின்.அழகிரி.சதாசிவம், தரணிதரன், நவீன். ஸ்ரீதர், சுரேஷ். ஆகியோர் இருந்தனர்.



மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி, திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருச்சி காட்டூர் தஞ்சை ரோட்டில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என்.சேகரன்,வண்ணை அரங்கநாதன், பி.எம். சபியுல்லா முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர தொகுதி அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற தந்தை பெரியாரின் 51வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்டப் பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் தஞ்சை இராசா மிராசுதார் மகப்பேறு மருத்துவமனையில் மின் தூக்கி அமைப்பதற்கான இடத்தினை மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜத்துடன் இணைந்து பார்வையிட்டார். உடன் அம்மாபேட்டை ஒன்றிய குழு தலைவர் கே.வீ.கலைச்செல்வன், அரசு வழக்கறிஞர்கள் பா.விஜயக்குமார், ஜெயக்குமார் உள்ளிட்ட மருத்துவர்கள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.